*Journal of Social Review, 12(1), June 2025*
*Department of Social Sciences*
*Faculty of Arts and Culture*
*South Eastern University of Sri Lanka.*

# ஈழத்துக் கலை வளர்ச்சியில் தவில் நாகசுரக் கலை மரபின் பரிணாமம்

**கிருபாசக்தி கருணா,**
**இசைத்துறை,, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

**Correspondence: kirupasakthy@univ.jfn.ac.lk**

**ஆய்வுச்சுருக்கம்**

கலைகளைப் பற்றிய விளக்கம் தரும் டி.வி.நாராயணசாமி, ‘‘கலை என்பது மக்களின் வாழ்வியலை, பண்பாட்டை, நாகரிகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி. மக்கள் வாழ, வளர சமுதாய நீதிகளையும் அறத் தத்துவங்களையும் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டிடக் கலைகளைப் போல் வேறு சாதனம் இல்லை’’ (நாராயணசாமி, 1980. ப.23) என்று கூறுகிறார். இக்கூற்று ஒரு நாட்டுக்கோ, ஒரு பிரதேசத்திற்கோ பொருந்தும். இந்தவகையில் பார்க்கும்போது ஈழத்தில் குறிப்பாக, யாழ்ப்பாணத்தில் மன்னர்கள், அரசவைப் புலவர்கள். ஆர்வலர்கள் ஆகியோரது ஆதரவோடு கலைகள் தோற்றம்பெற்று வளர்ச்சியடைந்துள்ளன. இக்கலைகளுள் இசைக்கலையானது ஆலயங்கள் மூலமாகவும், வாய்மொழிப்பாடல்கள் மூலமாகவும், கூத்துக்கள் இசைநாடகங்கள் மூலமாகவும், மக்களுக்குள் அறிமுகமாகி வரன்முறையான கர்நாடக இசையாகப் பரிணமித்துள்ளது. இந்தவிதத்தில் ஈழத்திலுள்ள இந்து ஆலயங்கள் புராணபடனம், திருமுறைகள், சிவாகமக் கிரியைகள், சங்கீத கதாப்பிரசங்கம், தவில்-நாகசுரம் ஆகிய அம்சங்கள் மூலம் இசையை வளர்ப்பதற்குப் பெரும்பங்காற்றியுள்ளன. இவற்றுள் தவில்-நாகசுரம் ஆகிய வாத்தியங்கள் ஆலயங்களில் மட்டுமன்றி மங்கள நிகழ்வுகள், அரசுசார் நிகழ்வுகள், நிறுவன நிகழ்வுகள், பொது வைபவங்கள் ஆகியவற்றிலும் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுகின்றன. ஆகவே, தவில்-நாகசுரக் கலைஞர்களின் ஈழத்து வருகைபற்றி இவ் ஆய்வில் கூறப்படுகின்றது.

திறவுச்சொற்கள்: தவில், நாகசுரம், சேவகம், சிட்சை, வாய்ப்பாட்டு, இசைப்பயிற்சி

## 1. அறிமுகம்.

### தவில்-நாதசுரக் கலைஞர்களின் வருகையின் பின்னணியில் ‘ஈழமும் தென்னிந்தியாவும்’

இந்து சமுத்திரத்தின் மத்தியில் தென்னிந்தியாவின் தென்பகுதிக்கு அண்மையில் அமைந்துள்ள ஒரு சிறிய தீவு இலங்கை ஆகும். இதன் காரணமாக ஆதி காலத்திலிருந்து இத்தீவு பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டது. அவற்றுள்



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

தம்பன்ன, இலங்கை, ஈழம் ஆகிய பெயர்கள் வரலாற்று அறிஞர்களின் அதிக கவனத்தைக் கொண்ட பெயர்களாக காணப்படுகின்றன. (புஸ்பரட்ணம், 2017.ப.1) இந்து சமுத்திரத்தின் மத்தியில் கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையின் மையத்தில் இந்நாடு அமைந்திருப்பதன் காரணமாக இந்தியாவில் காலத்துக்கு காலம் தோன்றி வளர்ந்த பண்பாடுகள், விழுமியங்கள் சமகாலத்தில் இலங்கையிலும் செல்வாக்குச் செலுத்தின. ஈழத்திலே தொடக்க காலத்திலிருந்தே தமிழகத்துக் கலைகளான கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் முதலான நுண்கலைகளுடன் இலக்கியமும் பல்வேறு வகைகளிலே வளர்ந்து வந்துள்ளன. எனினும், இக்கலைகள் இங்கு வேரூன்றிய காலத்தைச் சரியாக நிர்ணயிப்பதற்கான ஆதாரங்கள் காணப்படவில்லை. இருந்த போதும் மிக நீண்ட காலமாகத் தமிழகத்தில் வளர்ந்துவந்த இக்கலைகள் இங்கும் கோயிற் கலைகளாகத் தோற்றம் பெற்று நிலைபெற்றன என்று கூறலாம்.

## ஆய்வின் நோக்கமும் குறிக்கோள்களும்.

நோக்கம்: ஈழத்துக் கலை வளர்ச்சியில் தவில் நாகசுரக் கலையின் பரிணாமத்தைப் பற்றிக் கூறுவது இவ்ஆய்வின் நோக்கமாகும்.

குறிக்கோள்கள்: ஈழத்தில் தவில் நாகசுரக் கலைமரபின் வரவைத் தென்னிந்திய-யாழ்ப்பாணத் தொடர்புகளின் அடிப்படையில் நோக்குதல், தவில் நாகசுரக் கல்வி வரலாற்றைச் சுருக்கமாக நோக்குதல், தவில் நாகசுரக் கலைஞர்களை இனங்கண்டு, அவர்களுடைய செயற்பாடுகள், பங்களிப்புகள் இனங்காணுதல் ஆகியன இதன் குறிக்கோள்களாகும்.

## யாழ்ப்பாணம் - தென்னிந்தியா அமைவிடம்

யாழ்ப்பாணம் தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் அமைந்திருந்தமையாலும் வணிகக்கப்பல்கள் வந்து செல்லக்கூடிய துறைமுகங்களால் ஏற்பட்ட வணிகம் தொடர்பான செயற்பாடுகளாலும், தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தொடர்புகள் சமூகப் பண்பாட்டு அடிப்படையில் மிக இறுக்கமாக இருந்தது. இதனை உறுதி செய்வதாக வரலாற்றாசிரியர் சி.பத்மநாதன் தனது நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

> ‘‘யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட புராதன குடியேற்றங்களைப் பற்றித் தமிழ் நூல்களிலோ மகா வம்சத்திலோ எதுவிதமான குறிப்புகளும் இல்லை. தொல்பொருள் அகழ்வாய்வுகள் கந்தரோடையில் 1967 ஆம் ஆண்டில் நடைபெற்றமைக்கு முன்பு எதுவிதமான ஆதாரங்களும் கிடைக்கவில்லை. ஆயினும் விமலா பெக்லியின் தலைமையில் பென்சில்வேனியாப் பல்கலைக்கழகத்து அருங்காட்சியகத்தினர் நடத்திய அகழ்வாய்வுகளின் பயனாகத் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மக்களே கந்தரோடையின்



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

> ஆதியான குடியிருப்புகளை உருவாக்கினார்கள் என்பது தெளிவாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையினர் 1980இல் ஆனைக் கோட்டையில் நடத்திய அகழ்வாய்வுகளும் பொன்னம்பலம் ரகுபதி கந்தரோடை, காரைநகர், வேலணை, நாகர்கோயில், மண்ணித்தலை போன்ற இடங்களிலே மேற்கொண்ட மேலாய்வுகளும் இதனை மேலும் உறுதி செய்தன. அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டினதும் தீவு பற்றினதும் ஆதியான குடியிருப்புகள் தென்னிந்தியப் பெருங்கற் பண்பாட்டு மக்களோடு தொடர்புடையவை என்ற வரலாற்று உண்மை வெளிப்பட்டது.'' (பத்மநாதன், 2011.ப.3)

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து மக்கள் இப்பிதேசத்தில் வந்து குடியேறத் தொடங்கிய காலத்திலிருந்து கலைகள், வழிபாட்டு முறைகள் நிலவி வந்துள்ளன என்று கூறலாம். இலக்கிய முன்னோடிகள், புலவர்கள் ஆகியோருக்கும் தமிழகத்திற்கும் இடையில் இறுக்கமான தொடர்புகள் இருந்துள்ளன. இசை வளர்ச்சிக்கு மன்னர்கள், அறிஞர்கள், ஆர்வலர்களுடைய பேராதரவு இருந்தது.

## 2. நாடு முழுவதும் கலைக்கிருந்த ஆதரவு

இலங்கையில் பௌத்த மன்னரும் இந்து மன்னரும் ஒருங்கே ஆதரித்து நாடு முழுவதிலும் செல்வாக்கு பெற்றிருந்த இந்து மதம் போர்த்துக்கீசர் வருகையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. பௌத்தப் பொதுமக்கள் பௌத்தத்துடன் இந்து மத வழிபாட்டு அம்சங்களையும் ஏற்றிருந்ததுடன் சிங்களப் பிரதேசங்களில் இருந்த ஆலயங்களின் வழிபாட்டு முறைகளில் பிராமணர்களையும், இசையையும், திருமுறைகளையும், வாத்தியக் கருவிகளையும் ஏற்றிருந்தனர்.

> ''ஜயவர்த்தனபுரம் எனப்பட்ட கோட்டைத் தலைநகரின் வெளியே அனுராதபுரத்திலிருந்த காவற்தெய்வத்தின் கோயிலைப் போன்று, ஓர் ஈஸ்வரன் கோயில் அமைந்திருந்தது. அங்கு வாத்தியங்கள் இசைக்கத் தமிழ் மொழியிலே தேவாரங்கள் பாடப்பட்டன என சிங்கள நூலாகிய ஸலலிஹினி சந்தேச கூறும்.'' (இந்திரபாலா, 1978. ப.9).

ஆகவே, தமிழர் பிரதேசங்களில் சைவசமய வளர்ச்சிக்கோ இசை சார்ந்த வளர்ச்சிக்கோ தடைகள் இருந்திருக்காது என்பது இச்செய்தி மூலம் புலனாகின்றது. குறிப்பாகப் பொலநறுவையின் வீழ்ச்சிக்குப் பின் தமிழ்ப் பிரதேசத்தில் ஒன்றாக விளங்கிய யாழ்ப்பாணத்தில் இந்து மன்னர்களும் சிற்றரசர்களும் ஆட்சி நடத்திய காரணத்தினால் இந்துமதத்தின் செல்வாக்கு மிளிர்ந்தது. தமிழ் மன்னர்கள் அரசவையிலே புலவர்களையும் கவிஞர்களையும் ஆதரித்ததன் காரணமாகப் பல



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

வகைகளிலும் கலைகள் வளர்ந்தன. இவற்றின் அடிப்படையில் தவில்-நாகசுரக் கலையின் ஈழத்து வருகைபற்றி நோக்கப்படுகின்றது.

### 3. நாகசுரம்-தவில்

நாகசுரம் என்ற கருவிக்கு நாகசின்னம், நாகசாரம், நாதஸ்வரம், நாயனம் எனப் பல பெயர்கள் இருந்தாலும் ''நாகசுரம்'' என்ற பெயரையே பெரும்பாலானவர்கள் பயன்படுத்துகிறார்கள். யாழ்ப்பாண அகராதி நாகசுரம், நாகசின்னம், நாகசரம் ஆகிய மூன்று பெயர்களுக்கும் ''ஓரூதுகுழல்'' என்ற கருத்தையே தருகின்றது. (சந்திரசேகரப்பண்டிதர்., சரவணமுத்துப்பிள்ளை.1842 .ப.109)

''நாதசுரம்'' என்ற சொல் கருதும் பொருள் இவ்வாத்தியத்துக்குப் பொருந்தாது என்பது பேராசிரியர் ராகவனின் கருத்து. இக்குறிப்பு பேராசிரியர் மகேஸ்வரனின் நூலில் காணப்படுகிறது. (மகேஸ்வரன், 2007.ப.3)

யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் நாகசுரம், தவில் கலைஞர்களை நட்டுவர், மேளகாரர், நாயினக்காரர் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. இதனால் நாகசுரத்தை நாயினம் என்று கூறுவது பேச்சுவழக்கில் அதிகமாக உள்ளது. ஒல்லாந்தர் காலத்தில் எழுந்த தேசவழமைச் சட்டம் ''நட்டுவர்'' என்ற பெயரையே சட்ட ஒழுங்கில் காட்டியிருக்கிறது. (சிவத்தம்பி,1993. ப.16).

தவில் எனும் தோற்கருவி தமிழர்களின் பண்டைய தோற்கருவியான பறையின் பரிமாண வளர்ச்சி என்று கூறப்படுகிறது. யாழ்ப்பாண அகராதியும் ''தவில்'' என்ற சொல்லிற்கு ''ஓர் பறை'' என்ற கருத்தையே தருகிறது. (சந்திரசேகரப்பண்டிதர்., சரவணமுத்துப்பிள்ளை.1842. ப.21)

தவில் என்ற சொல் முதன்முதல் அருணகிரிநாதரின் திருப்புகழில்தான் கிடைக்கிறது. ''பனியின் விந்துளி போலவே கருவினுறு....'' எனத் தொடங்கும் 520வது திருப்புகழில் ''வளைபேரி தவில் கணம் பறை காளமோ டிமிலை தொனி'' என வருகிறது.

### தமிழக நாகசுர, தவில் கலைஞர்கள் வருகை

19ஆம் 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தமிழ்நாட்டிலிருந்து தவில், நாகசுரக் கலைஞர்கள் கோயில் சேவகத்திற்காக அழைக்கப்பட்டார்கள். பின்னர் சிலர் இங்கிருந்த தவில், நாகசுரக் கலைஞர்களின் குடும்பங்களோடு மணத் தொடர்பையும் ஏற்படுத்தினார்கள். நாதஸ்வர வித்துவான் சு.க.இராசா ''எமது குடும்பமெல்லாம் மாவிட்டபுரம் ஆதீனத்தைச் சேர்ந்தவை. எமது பரம்பரை பூர்வீகத்தில் திருப்புகலூரைச் சேர்ந்தது.'' (சண்முகசுந்தரம், 1974. ப.7).



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஈழம் சுதந்திரம் அடையும்வரை, தமிழ்நாட்டிலிருந்து பெருமளவு தவில், நாகசுரக் கலைஞர்களின் கலைத்தொடர்பு யாழ்ப்பாணத்தில் உன்னத நிலையில் இருந்தது. இதன் காரணமாகச் சிறப்பான நாகசுர, தவில் பரம்பரை தோன்றியது.

## 4. யாழ்ப்பாணத்தில் இருந்த நாகசுர, தவில் கல்வி

குருகுலக்கல்வி முறையில் இருந்த இசைவேளாளர்களுடைய (நாகசுர, தவில் கலைஞர்களை இசைவேளாளர் என்று அழைக்கும் வழக்கம் யாழ்ப்பாணத்தில் இருந்தது) கல்வி முறை பல சிறப்பம்சங்களைக் கொண்டிருந்தது. (சண்முகசுந்தரம்,1982. ப.20)

### 4.1. ஆரம்பக்கல்வி

இசைவேளாளர்களின் ஆரம்பகட்டக் கல்வியில் தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் நடைமுறையில் இருந்த திண்ணைப் பள்ளிக்கூடத்திலும், சிறுவர் பள்ளியிலும் தம் கல்வியைக் கற்றனர். இவர்கள் பாடத்திட்டத்தில் தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், கந்தபுராணம், திருப்புகழ் போன்ற சமய நூல்கள் இடம்பெற்றன. இவ்விடத்தில் தவில் வித்துவான் ஆ.வை.ஆறுமுகம் கூறியுள்ள கருத்துக்கள் குறிப்பிடுதல் பொருந்தும்.

''எமது தொழிலுக்கு ஏட்டுப் படிப்பு முக்கியம். இரண்டு காரணங்களுக்காகக் குறிப்பிட விரும்புகின்றேன். ஒன்று, இசையை நன்கு கற்று அறிய ஏட்டுப் படிப்பு முக்கியம். இரண்டு, நல்ல தமிழ் அறிவு, நல்ல குணத்தை, பண்பை உருவாக்கும். எனது ஆரம்பக் கல்வி ஏட்டுப் படிப்புடன் தொடங்கியது.'' (சண்முகசுந்தரம், 1974. ப.26)

### 4.2. வாய்ப்பாட்டு

அக்காலத்தில் இசையாளர்களுக்கு வாய்ப்பாட்டு கற்றுக் கொடுப்பது கட்டாயமாக இருந்தது. பாட்டின் பொருளையும் உணர்ச்சியையும் நன்கு விளங்கி வாசிக்க வேண்டும் என்பதில் கவனம் செலுத்தினார்கள். நாகசுர வித்துவான் மாவிட்டபுரம் இராசா, தான் நான்கு வருடங்கள் வாய்ப்பாட்டைக் கற்றதாகக் கூறியுள்ளார்.

### 4.3. சிட்சையின் தொடக்கம்

இசையாளர் சமூகத்தில் வாத்திய சிட்சை ஆரம்பிக்கும் போது சில பாரம்பரிய முறைகளைக் கடைப்பிடித்தனர்

- ஆரம்பத்தில் சரஸ்வதி பூசை செய்யப்படும்
- வாத்தியம் சிங்காரிக்கப்பட்டு (அலங்காரம்) பூசையில் வைக்கப்படும்.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

- உறவினர்கள் அழைக்கப்படுவார்கள்.
- குரு ஆசிர்வாதம் பண்ணி வாத்தியம் கொடுக்கப்படும்
- மாணவர் வீழ்ந்து வணங்கி வாத்தியத்தை வாங்கி வாசிப்பர்

### 4.4. யாழ்ப்பாணத்தில் சிட்சை

இவர்களுடைய ஆரம்ப சிட்சை, முறையாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. ஆரம்பப்பயிற்சி முடிந்ததும் பெரும் வித்துவான்களிடம் சேர்ந்து தங்களை வளர்த்துக் கொள்ளும் வழக்கம் இருந்தது. பெரிய வித்துவான்களும் சிட்சைக்கு வரும் மாணவர்களை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுவர். தமது அரங்கேற்றத்தை முடித்ததும் பெரிய வித்துவான்களுடன் சோடி நாயினம் ஆகவும், சோடித் தவிலாகவும் வாசிக்க ஆரம்பிப்பர்.

### 4.5. தமிழ்நாட்டில் சிட்சை

தமிழ் நாட்டிற்குச் சென்று தமது இசைப்பயிற்சியை வளர்த்துக் கொள்வதில் பெரும்பாலான தவில், நாகசுர வித்துவான்களுக்கு ஆர்வம் இருந்திருக்கின்றது. இது தொடர்பான சில விபரங்கள் பின்வரும் அட்டவணையில் தரப்படுகிறது. (சண்முகசுந்தரம்.1974. ப.26)

| | பெயர் | யாழ்ப்பாணத்தில் சிட்சை | தமிழ்நாட்டில் சிட்சை |
|---|---|---|---|
| 1 | அளவெட்டி வி.தட்சணாமூர்த்தி | 1.இணுவில் விசுவலிங்கம்<br>2.வண்ணார்பண்ணை காமாட்சிசுந்தரம் | நாச்சியார் கோயில் ராகவன் |
| 2 | அளவெட்டி நா. குமரகுரு | அளவெட்டி நாகலிங்கம்(தந்தை)<br>மூளாய் ஆ. வை. ஆறுமுகம் | வலங்கைமான்சண்முகசுந்தரம் |
| 3 | அளவெட்டி. என்.கே.பத்மநாதன் | என்.கந்தசாமி (தந்தை) | சீர்காழி திருநாவுக்கரசு |
| 4 | அளவெட்டி இ.கேதீசுவரன் | மாவிட்டபுரம்.சு.க.இராசா | பந்தனை நல்லூர் தட்சணாமூர்த்தி |



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

தமிழ்நாட்டிலிருந்து இளைஞர்கள் சிட்சைக்காக யாழ்ப்பாணம் வந்து சென்ற செய்தி ஒன்றும் கிடைக்கிறது. (சண்முகசுந்தரம்.1982 ப.27)

இது தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் தரப்படுகிறது.

- தமிழ் நாட்டிலிருந்து வந்த இளைஞர்களுக்கு நாகசுர சிட்சை அளித்த யாழ்ப்பாண வித்துவான்கள்- அளவெட்டி தர்பார் கந்தையா, மாவிட்டபுரம் பக்கிரிசாமி, மாவிட்டபுரம் சோமாசுக்கந்தர்
- தமிழ் நாட்டிலிருந்து வந்த இளைஞர்களுக்கு தவில் சிட்சை அளித்த யாழ்ப்பாண வித்துவான்கள் பெரிய பழனி, இணுவில் சின்னத்துரை, மூளாய் ஆ.வை.ஆறுமுகம்
- அக்காலத்தில் யாழ்ப்பாணம் வளம் மிக்கதாக விளங்கியதால், சிட்சைக்கு வரும் தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கு இலவச உணவும் உடையும் வழங்கப்பட்டது.
- அப்பிள்ளைகள் தாளக் காரராகவும் ஒத்துக் காரராகவும் பணிபுரிவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதுடன் சன்மானமும் வழங்கப்பட்டது

## 4.6. நாதசுரம், தவில் போடுதல்

- ‘‘போடுதல்’’ என்பது அரங்கேற்றத்தைக் குறித்தது. அக்காலத்தில் தவில் போடுதல், நாகசுரம் போடுதல் பெரிய விழாவாக நடைபெறும்.
- ஆசிரியரின் குலதெய்வக் கோயிலின் மூலமூர்த்தியின் முன் நடைபெற்றது
- குலதெய்வத்தின் காலடியில் வாத்தியம் பூசைக்கு வைக்கப்பட்டுப் பூசை செய்யப்படும் பூசை முடிந்ததும் வாத்தியத்தை எடுத்து இளம் வித்துவானின் கையில் குருக்கள் கொடுப்பார்.
- சிவாச்சாரியார் வணக்கமும், குரு வணக்கமும் இடம்பெறும்.
- குருவும் மாணவனுடன் இணைந்து வாசிக்கும் மரபு இருந்தது.

## 4.7. தனித்துச் சேவகஞ் செய்தல்

நாகசுர, தவில் கலைஞர்கள் கோயில் பணி செய்வதை யாழ்ப்பாணத்தில் ‘‘சேவகம்’’ என்று அழைக்கப்பட்டது. இம்மரபு இன்றுவரை உள்ளது. யாழ்ப்பாணத்தில் இது மங்கல வாத்தியம் என்று அழைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் மங்கல வாத்தியம் வாசிக்கப்படும் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

- கோயில்கள்
- அரச நிகழ்வுகள், ஊர்வலங்கள் (எ-டு- நாவலர் நூற்றாண்டு விழா)



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

- கல்லெடுப்பு அல்லது அந்தியேட்டி
- பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா
- குழந்தையைத் தொட்டிலில் இடுதல், காது குத்துதல், ஏடு தொடக்குதல், பூணூல் போடுதல், பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகு விழா, திருமண விழா, அறுபதாம் ஆண்டு விழா.
- திறப்பு விழாக்கள், தலைவர்களை அழைத்தல்

நாகசுரம், தவில் யாழ்பாணத்தில் மிகுந்த மதிப்புடன் இருந்திருக்கின்றது. இந்நிகழ்வுகளுக்குரிய இரசிகர்கள் மிகுந்த ஞானம் உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இதன் காரணமாகத் தமிழ்நாட்டிலிருந்து நாகசுர, தவில் கலைஞர்கள் பெரு விருப்பத்துடன் வந்து சென்றிருக்கிறார்கள். அக்காலத்தில் மூன்று மாதங்களுக்கு மேலேயும் தங்கி சேவகம் செய்திருக்கிறார்கள். அப் பெருமைமிக்க கலைஞர்கள் சிலரின் தகவல்கள் வருமாறு.

| **தவில்** | **நாகசுரம்** |
|---|---|
| இராமேசுவரம் சேதுராசா | திருவெண்காடு சுப்பிரமணியம் |
| கும்பகோணம் தங்கவேல் | திருநெல்வேலி சண்முகக்குட்டி |
| திருமுல்லைவாசல் முத்துவீர | கோட்டூர் இராசரத்தினம் |
| வலையப்பட்டி சுப்பிரமணியம் | கோயிற்பட்டி இராசையா |
| தரித்தனூர் நாராயணசாமி | அம்பல் இராமச்சந்திரன் |
| திருமங்கலம் சுந்தரேசன் | சேரன்மாதேவி குருசாமி |

மேலும் நாச்சியார் கோவில் இராகவன், காருக்குறிச்சி அருணாசலம் போன்றவர்களும் இங்கு வந்து காலத்துக்குக்காலம் சேவகஞ் செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்து இசை வளர்ச்சியில் பங்கெடுத்த சில நாகசுரக் கலைஞர்களின் பெயர்கள் கீழ்வருமாறு.

### 1. இராமநாதன் பக்கிரிசாமி (15.06.1912)

தஞ்சாவூரில் பிறந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்தவர். தனது தமையனார் சின்னப்பிள்ளை என்பவரிடம் நாகசுரம் பயின்றார். சுழிபுரம், தொல்புரம் எனும் இடங்களில் 45 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து, பல ஆலயங்களில் கோயில் பணி



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

செய்தவர். இவரது கலைச்சேவையைப் பாராட்டி "நாதஇசைமணி" எனும் பட்டம் வழங்கப்பட்டது. இவரது மகனான நாகசுரக் கலைஞர் சிவகுமார் தந்தையின் கலைப் பணியை ஆற்றுகின்றார்.

**2. இரத்தினகுமார் கோவிந்தசாமி (21.04.1964)**

இணுவிலில் பிறந்த இவர் 1987 இலிருந்து நாகசுர இசைப்பணியை, ஆலயங்களிலும் திருமண வைபவங்களிலும் ஆற்றிவருகிறார். இவரது இசைப்பணியைப் பாராட்டி "நாதவிந்தன்", "கானாமிர்தன்" எனும் பட்டங்கள் வழங்கிப் பாராட்டப்பட்டவர்.

**3. சோமசுந்தரம் இராமநாதன் (07.10.1923)**

தெல்லிப்பழையில் பிறந்து இணுவிலில் வசித்த சோமசுந்தரம் அவர்கள், பதினான்கு வயதிலிருந்து நாகசுரக் கலையைப் பயின்றார். இவர் தனது கற்கையை பக்கிரிசாமிப்பிள்ளை, உருத்திராபதி, நடராஜா, கிருஷ்ணமூர்த்தி ஆகியோரிடம் பயின்றார். இவரது இசைச் சேவைகள் வருமாறு.

- தந்தை செல்வாவுடன் இணைந்து மாவிட்டபுரத்தில் இசைப்பாடசாலையை அமைத்து, நாகசுரத்தைக் கற்பித்தமை
- தெல்லிப்பழைத் துர்க்கையம்மன் ஆலயத்தில் இசைப் பாடசாலை நிறுவியமை
- பல ஆலயங்களிலும், இசைக்கச்சேரிகளிலும் இசைக் கச்சேரி ஆற்றியமை
- வீரகேசரிப் பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியமை
- ஈழநாடு, தினபதி, உதயன் ஆகிய பத்திரிகைகளுக்கு செய்தியாளராக இருந்தமை
- இசையாளன் என்ற மாதாந்த சஞ்சிகையை வெளியிட்டமை
- கம்பன் கலைக்கழகம் என்ற அமைப்பை ஸ்தாபித்து அதன் மூலம் சிலப்பதிகார விழா, இலக்கிய விழா ஆகியவற்றை நடாத்தியதுடன் சிலம்பொலி என்ற சஞ்சிகையையும் வெளியிட்டமை

இவரது கலைச் சேவையையும், சமூகத் தொண்டையும் பாராட்டி கலாபூஷணம், கலைஞானகேசரி, ஸ்வரஞான கலாபமணி, இசைஞானவாரிதி, சமூகத் தொண்டன் என்ற பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

**4. செல்லப்பா கிருஷ்ணமூர்த்தி (25.10.1920)**

இணுவிலில் பிறந்த இவர், நாகசுரம், தவிலிலும் பணி ஆற்றியுள்ளார். அத்துடன் தவில், கெஞ்சிரா, வாய்ப்பட்டு இசை ஆகியவற்றிலும் புலமையுள்ளவராக விளங்கியதுடன் பல மாணவர்களை உருவாக்கியவர். இவரைக் கௌரவித்து வழங்கப்பட்ட பட்டங்கள்- ஞான ஏந்தல், லயஞானமணி என்பனவாகும்.

**5. முருகப்பா பஞ்சாபிகேசன் (01.07.1924)**

சாவகச்சேரியில் பிறந்த இவர், நாகசுரத்தை முறையாகப் பயின்று, தமிழ்நாடு சென்று ரி.என்.ஆர்.நடராஜசுந்தரம்பிள்ளையிடமும் ஐயம்பேட்டை வேணுகோபாலபிள்ளையிடமும் தன் இசைக்கல்வியை விருத்தி செய்தார். இவர் தனது இசைச் சேவையை யாழ்ப்பாணம் மட்டுமன்றி லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலும் ஆற்றியுள்ளார். முக்கியமான கச்சேரிகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். இவரது மகன்களான நாகேந்திரன், கேதீஸ்வரன் ஆகியோர் தற்போது மிகத் திறமையான நாகசுரக் கலைஞராகத் திகழ்கின்றனர்.

- இலங்கை ஜனாதிபதி மாளிகையில் கச்சேரி செய்தமை
- இலங்கைப் பாராளுமன்றத்தில் கச்சேரி செய்தமை
- நல்லூர்க் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழாவில் வாசித்தமை
- 42 வருடங்களுக்கு மேலாகத் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் சிவராத்திரி தினத்தன்று வாசித்தமை
- கொழும்பில் 2வது உலக இந்து மாநாட்டில் வாசித்தமை

பட்டங்கள்: இசைவள்ளல், நாதஸ்வர கலாமணி, நாதஸ்வரகானவாரிதி, இசைப் பேரறிஞர், கலாபூஷணம், ஸ்வரஞானதிலகம், சிவகலாபூஷணம்

**6. என்.கே.பத்மநாதன் (19.09.1931)**

யாழ்ப்பாணம் அளவெட்டியில் பிறந்த என்.கே.பத்மநாதன் அவர்கள் நாகசுரத்தைத் தன் தந்தையாரிடமும், பின்னர் சீர்காழி எஸ்.பி.எம். திருநாவுக்கரசு என்பவரிடமும் கற்றுத் திறமையான நாதஸ்வரக் கலைஞன் ஆனார். இவரது இசைப் பணிகளுள் முக்கியமானவை வருமாறு.

- நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆஸ்தான வித்துவானாக 47 வருடங்கள் பணியாற்றியமை.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

- மதுரையில் நடைபெற்ற 2வது தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசித்தமை

- பிரிட்டனின் பிரபல இசைக்கூடங்களில் ஒன்றான றுநளவ ஆைைளைவநச ா்யடட இல் வாசித்தமை

- லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சிங்கப்பூர் போன்ற பல நாடுகளில் வாசித்தமை

பட்டங்கள்: நாதஸ்வர கான கலாநிதி, ஏழிசை வேந்து, ஏழிசை வாரிதி, கலைமாமணி, நாதஞானவாருதி, நாதஸ்வர மாமேதை, நாதஸ்வரச் சக்கரவர்த்தி, கௌரவகலாநிதி, அரசின் உயரிய விருதான கலாசூரி.

இவர்களைவிட இன்னும் பல நாகசுரக் கலைஞர்கள் யாழ்ப்பாண இசை வளர்ச்சியில் பணியாற்றியுள்ளார்கள். இருபத்தோராம் நூற்றாண்டிலும் சிறந்த இளம் நாகசுரக் கலைஞர்கள் தோன்றி இசையை வளர்த்து வருகின்றார்கள்.

**தவில் கலைஞர்கள்**

யாழ்ப்பாணத்தில் பல தவில் கலைஞர்கள் வாழ்ந்து சிறப்பான கலைத் தொண்டு புரிந்துள்ளார்கள். ஈழத்தில் தவில் கலை மூலம் யாழ்ப்பாணத்து இசை வளர்ச்சியில் பங்கெடுக்கும் தவில் கலைஞர்கள் சிலரைப்பற்றிய குறிப்புகள் வருமாறு.

**1. வண்ணை என். காமாட்சிசுந்தரம் (1906-1944)**

யாழ்ப்பாணத்து வண்ணார்பண்ணை நாகலிங்கம் தம்பதிகளுக்கு மகனாக காமாட்சிசுந்தரம் பிறந்தார். தனது ஆரம்ப சிட்சையைத் தனது தமையனாரான சின்னத்துரை உபாத்தியாயரிடம் கற்றார்.

இவரது வாசிப்பின் சிறப்புகள்

- தமிழ் நாட்டுக் கலைஞர், நாதஸ்வரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை ரி.என்.ராஜரத்தினம்பிள்ளை அவர்களுக்கு தவில் வாசித்தமை
- திருவீழிமிழலை சுப்பிரமணியம்பிள்ளை அவர்களுக்கு தவில் வாசித்தமை
- அக்காலத்தில் இவரது வாசிப்பின் சிறப்புக் காரணமாக இந்தியாவில் ஒரு மீனாட்சி சுந்தரம் இலங்கையில் ஒரு காமாட்சி சுந்தரம் என்று சிறப்பித்தமை
- யாழ்ப்பாணத்தில் ‘‘தவில் சமா’’ எனும் வாசிப்பால் சிறப்படைந்தமை
- தவிலுடன் கஞ்சிரா வாசிப்பதிலும் சிறப்பாக விளங்கியமை
- தனது சிறந்த கலை வாரிசுகளை உருவாக்கியமை. இவர்களுள் வி.தட்சணாமூர்த்தி, இசையரசு சின்னப்பழனி, இவரது மகன் கா.குகன்



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். கஞ்சிரா பயின்றவர்களில் எம்.என்.செல்லத்துரை குறிப்படத்தக்கவர்

**2. அளவெட்டி வி. தட்சணாமூர்த்தி (1933-1975)**

இணுவிலில் விஸ்வலிங்கம், இரத்தினம்மாள் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தவரே தவில் மேதை தட்சணாமூர்த்தி ஆவார். ஆரம்பத்தில் தன் தந்தையிடமும் இணுவில் சின்னத்தம்பி என்பவரிடமும் தவிலைக்கற்றார். பின்னர் தமிழ்நாட்டில் நாச்சியார் கோயில் இராகவப்பிள்ளை என்பவரிடம் மேலும் தவிலைக் கற்றார். தமிழ்நாட்டில் பெற்ற அனுபவங்களுடன் யரழ்ப்பாணம் திரும்பினார். அங்கு நடைபெற்ற கச்சேரிகள் தட்சணாமூர்த்தியின் திறமையை உலகறியச் செய்தன. பின்னர் இவரது வாழ்வு, திருமணம் அளவெட்டியில் நிலைபெற்றதால் இவர் அளவெட்டி தட்சணாமூர்த்தி ஆனார். பின்னர் இவரின் வாசிப்பிற்குரிய சந்தர்ப்பங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்திக் கொடுத்த பெருமை நீடாமங்கலம் சண்முகவடிவேல் அவர்களைச் சாரும். இவர் வாசிக்காத இடமே இல்லை என்று கூறுமளவிற்கு, இவரது வாசிப்பு வெளிக்காட்டப்பட்டதன் காரணமாக ‘‘லயஞான குபேரபூபதி’’ என்ற உலகப் புகழ்பெற்ற பட்டத்துடன் இசையுலகின் நாதச்சக்கரவர்த்தியாக மாறினார். 1959-1975 வரை ஒன்றரைத் தசாப்தம் ஈழத்திலும் தமிழகத்திலும் தட்சணாமூர்த்தி சகாப்தமாக இருந்தது.

பட்டங்களும் முக்கியமான நிகழ்வுகளும்

- கற்பனைச்சுரங்கம், லயஞான குபேர குபேரபூபதி, தவில் வாத்திய ஏகச்சக்கிராதிபதி
- சென்னையில் ‘‘தங்கக் கோபுரம்’’ வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.
- திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை நினைவு விழாச்சபை கரூரில் 12.12.1968இல் தங்கக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை.

**3. இணுவில்.என்.ஆர்.சின்னராஜா (1934-1991)**

தஞ்சையைச் சேர்ந்த என்.இரத்தினம் என்பவருக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த பாக்கியம் என்பவருக்கும் மகனாக சின்னராஜா பிறந்தார். தவிற்கலையை சித்தங்கேணி மீனாட்சிசுந்தரன், இணுவில் சின்னத்தம்பி ஆகியோரிடம் கற்றார். தொடர்ந்து பிரபல்யமான நாதஸ்வரக் கலைஞர்களுக்கு வாசிக்கத் தொடங்கினார். இவரது கலைச்சிறப்புகள் பின்வருமாறு.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

- முதன்முதலாக இந்திய நாதஸ்வர, தவில் கலைஞர்களை யாழ்ப்பாணத்திற்கு அழைத்தமை
- இவ்வரிசையில் முதன்முதலாக மதுரை இசைக்கல்லூரி நாதஸ்வர விரிவுரையாளராக இருந்த தருமபுரம் கோவிந்தராஜபிள்ளை, அபிராமம் கணேசன் யாழ்ப்பாணத்திற்கு அழைப்பித்தமை
- தனது பிள்ளைகள் இரவீந்திரன், சுதாகர் ஆகியோரை சிறந்த தவில் கலைஞர்களாக ஆக்கியமை.
- ஆயினும் இவரது முதற் குரு இந்தியா திருநெல்வேலியைச் சேர்ந்த முருகண்டி என்பவராவர்.
- தவில் சமா எனச் சிறப்பிக்கப்படும் லய விந்நியாசத்தை பாமர மக்களிடையேயும் பிரபல்யப்படுத்தியமை
- தமிழ் நாட்டின் சிறந்த கலைஞர்களுடன் வாசித்தமை
- விவகாரவித்வமணி, லயஞானவித்வமணி, தாளஅலங்கார கல்பனாஜோதி, தவில் சக்கரவர்த்தி ஆகிய பட்டங்கள் பெற்றமை

ஆரம்ப காலந்தொட்டு ஈழத்திலுள்ள ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளின் போதும், வருடாந்த உற்சவங்கள், விசேட உற்சவங்கள் ஆகியவற்றிலும் நாகசுரமும் தவிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாணத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள பெரிய ஆலயங்களிலிருந்து சிறிய ஆலயங்கள் வரை உற்சவங்கள் இடம் பெறுகின்றன. ஆரம்பகாலங்களில் ஆலயங்களில் இரவு நேர உற்சவங்களில் விடியும்வரை நாகசுர, தவில் இசை இடம் பெற்றது. அக்காலத்தில் இந்தியக் கலைஞர்களுக்கும் இலங்கைக் கலைஞர்களுக்கும் இடையில் சினேகபூர்வமான இசைப் போட்டிகளும் இடம் பெறுவதுண்டு. விஸ்தாரமான இராக ஆலாபனைகள், கடினமான பல்லவிகள் மற்றும் தவிலில் விரிவான லய விந்நியாசமும் விடிய விடிய இடம்பெறும். பொதுமக்கள் (இரசிகர்கள்) ஆயிரக்கணக்கில் கூடி இந்நிகழ்ச்சிகளை இரசிக்க கூடிய காலகட்டங்களாக அவை அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக, தமிழகத் தவில் வித்துவான் வலையப்பட்டி ஆ.சுப்பிரமணியம் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தனித்தவிலுக்கு வழங்கப்பட்ட நேரத்தைப்பற்றி ஆனந்தவிகடனில் பிரசுரமாகிய குறிப்பொன்று “இசைவேளாளர்” என்ற நூலில் காணப்படுகிறது.

“59 இல் நாதசுர வித்துவான் யாழ்ப்பாணம் ராமமூர்த்தியுடன் மூன்று மாதங்களுக்கு நான் சிலோன் சென்றிருந்தேன். அங்கு தவிலுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இரண்டு மூன்று மணி நேரத்திற்குத் தனித் தவில் வாசிக்க வைத்தார்கள். தொழிலில் முன்னேற அது எனக்கு ஒரு அருமையான சந்தர்ப்பமாக அமைந்தது. - ஆனந்த விகடன் 18-01-1981”. (சண்முகசுந்தரம், 1982 ப.29)



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

நாகசுர தவில் வித்துவான்களின் ஆலய இசைப் பணியை ‘‘சேவகம்’’ என்று அழைக்கும் மரபு இன்றும் யாழ்ப்பாணத்து இசையாளர்களிடையே நிலவுகிறது.

கோயிலில் நித்திய நைமித்திய பூசைகளில் நாகசுர இசை முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. ஈழத்திலே ஒரு காலப் பூசை தொடக்கம் ஆறு காலப் பூசைகள் நடக்கின்ற கோயில்கள் இருக்கின்றன. நித்திய மேளச்சேவை இடம்பெறுகின்ற பெரிய கோயில்களும் உள்ளன. கிராமியக் கோயில்களில் பொங்கல், மடை, கஞ்சிவார்த்தல் போன்ற வைபவங்களில் நாதசுவரம் வாசிப்பதில்லை. மிருக பலியின் போது இசைத்தால் வாத்தியத்தின் தெய்வத்தன்மை கெட்டுப் போகும் எனும் நம்பிக்கை யாழ்ப்பாணத்து இசையாளர்களிடம் இருந்தது. நாகசுரம் தவில் காவடிக்குரிய சிறப்பான வாத்தியங்களாகக் கொள்ளப்பட்டன. கோயில்களில் இசைக்கப்பட வேண்டிய இராகங்கள், பூசை வேளைகளின் அடிப்படையில் மரபாகப் பேணப்பட்டது. (சண்முகசுந்தரம. 1982. ப.39)

## 5. தொகுப்புரை

யாழ்ப்பாணம் தென்னிந்தியாவிற்கு மிக அண்மையில் அமைந்திருந்தமையாலும் வணிகக்கப்பல்கள் வந்து செல்லக்கூடிய துறைமுகங்களால் ஏற்பட்ட வணிகத் தொடர்பினாலும் தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தொடர்புகள் சமூகப் பண்பாட்டு அடிப்படையில் மிக இறுக்கமாக இருந்தது. இதன் பின்பு ஏற்பட்ட தமிழக மக்களின் குடியேற்றம், தமிழ் மன்னர்கள் வருகை, புலவர்கள் வருகை ஆகியவற்றினால் கலைப் பரிமாற்றங்கள் நடைபெற்றுள்ளன. இதேபோன்று யாழ்ப்பாண பிரதேசத்தில் உள்ள ஆலயங்களில் நடைபெறும் நித்திய, நைமித்திய பூசைகளின் போதும், வருடாந்த உற்சவங்கள், விசேட உற்சவங்கள் ஆகியவற்றிலும் நாதஸ்வரமும் தவிலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கோயில்களில் இசைக்கப்பட வேண்டிய இராகங்கள், பூசை வேளைகளின் அடிப்படையில் மரபாகப் பேணப்பட்டுள்ளது. இதில் யாழ்ப்பாணக் கலைஞர்களும் தமிழகக் கலைஞர்களும் சிறந்த பணியை ஆற்றி யாழ்ப்பாணத்திற்கேயுரிய நாதஸ்வரத் தவில் பரம்பரை ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறார்கள். தவில் நாசுரக்கல்விமரபு மிகச் சிறப்பான முறையில் குரு சிஷ்ய பாரம்பரியத்துடன் வளர்க்கப்பட்டுள்ளது.இதில் யாழ்ப்பாணக் கலைஞர்களும் தமிழகக் கலைஞர்களும் சிறந்த பணியை ஆற்றி யாழ்ப்பாணத்திற்கேயுரிய நாகசுரத் தவில் பரம்பரை ஒன்றைத் தோற்றுவித்திருக்கிறார்கள்.

## உசாத்துணை நூல்கள்

இந்திரபாலா,கா.(1978). *ஆதி இலங்கையில் இந்துமதம்.* சுன்னாகம்: திருமகள் அச்சகம்.

சண்முகசுந்தரம்,த.(1974). *இசையும் மரபும்.* தெல்லிப்பழை: கலைப்பெருமன்றம்.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908

சண்முகசுந்தரம்,த.(1982). *இசை வேளாளர்.* தெல்லிப்பழை: அருள் வெளியீட்டகம்.

சந்திரசேகரப்பண்டிதர்., சரவணமுத்துப்பிள்ளை.(1842). யாழ்ப்பாணஅகராதி2. சென்னை: தமிழ்மண் பதிப்பகம்.

சிவத்தம்பி,கா.(1993). *யாழ்ப்பாண சமூகத்தை விளங்கிக் கொள்ளல்.* கொழும்பு: தர்சனா பிரசுரம்.

நாராயணசாமி,டி,வி. (1980). *கலையும் மொழியும்.* சென்னை: இயல் ,இசை நாடக மன்றம்.

பத்மநாதன்,சி.(2011) யாழ்ப்பாண இராச்சியம் ஒரு சுருக்க வரலாறு. கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

புஸ்பரட்ணம்,ப. (2017). *இலங்கைத் தமிழர் சுருக்க வரலாறு.* சுவிற்சலாந்து: தமிழ் கல்விச்சேவை.

மகேஸ்வரன்,வ.(2007). *தவில் மேதை தட்சிணாமூர்த்தி.* கொழும்பு: தமிழ்சங்கம்.



ISSN (Print): 2448-9204 ISSN (Online): 3051-4908